மாலை முரசு

பக்கங்கள் 18

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 07 புதன்கிழமை 25.10.2023 அதிர்வு 86

### யாழ். போதனா வைத்தியசாலையில்

# மது போதையில் குழப்பம் விளைவித்த 2 பேர் கைது

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் மது போதையில் அத்துமீறி நுழைந்து பாதுகாப்பு

04




# நிதி வேண்டாம்; நீதியே வேண்டும்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் கோரிக்கை

- கிளிநொச்சி நிருபர் -

“எமக்கு நிதி வேண்டாம்; நீதியே வேண்டும். அதற்காகவே நாம் போராடுகின்றோம்.”

– இவ்வாறு வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் தலைவி கலாரஞ்சினி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இன்று ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

“நிதிக்காகவோ, உதவிகளுக்காகவோ நாம் போராடவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நீதிக்காகவே நாம் போராடி வருகின்றோம்.

சர்வதேச ரீதியாக நீதியைப் பெற்றுக் கொள்ள எமது போராட்டம் வாய்ப்பாக இருக்கும்.” – என்றார்.



# இலங்கைக்குள் சீனாவின் கப்பல்

## கடும் அதிருப்தியில் இந்தியா

புவிசார் அரசியல் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள சீனாவின் “ஷி யான் 6” என்ற ஆராய்ச்சிக் கப்பல் இன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

இதனை இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உறுதி செய்துள்ளார்.

முன்னதாக இந்தக் கப்பல் எதிர்வரும் நவம்பர் மாதம்தான் இலங்கைக்கு வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அலி சப்ரி தெரிவித்திருந்தார்.

04

### தொலைபேசியில் உரையாடிய

# மூதாட்டி திடீரென மரணம்



- எஸ்.நிதர்ஷன் -

தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த மூதாட்டி திடீரென மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் – பொலிகண்டி தெற்கைச் சேர்ந்த ஜெயேந்திரன் சோதிமலர் (வயது 67) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அந்த மூதாட்டி தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த நிலையில் திடீரென மயங்கிச் சரிந்துள்ளார்.

அதையாடுத்து அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள்

04



# எம்.பி. பதவியை உடனடியாக துறக்க வேண்டும் சம்பந்தன்!

## இப்படி பகிரங்கமாகக் கோருகின்றார் சுமந்திரன்

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானஇரா.சம்பந்தன்அவருடைய முதுமை காரணமாக

04



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தப்போகும் பலஸ்தீன - இஸ்ரேல் இடையிலான மோதல்!

## முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்கிறார் முன்னாள் எம்.பி. சந்திரகுமார்

பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தப் போகும் பலஸ்தீன-இஸ்ரேல் மோதல் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

சர்வதேச சமூகம் இதற்கு முன்வர வேண்டும் என்று முன்னாள் எம்.பி. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு–

கடந்த 7 ஆம் திகதி ஹமாஸ் இயக்கத்தின் தாக்குதலுடன் மீளவும் புதுப்பிக்கப்பட்ட பாலஸ்தீன- இஸ்ரேல் யுத்தமானது, பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட ஆயிரக் கணக்கான பொதுமக்களை இரு தரப்பிலும் மனிதாபிமானமற்ற முறையில் காவு கொண்டுள்ளது. இருந்தும் போர் முடிவற்று நீண்டு கொண்டு செல்கிறது. இது தொடர்பில் நாங்கள் ஆழ்ந்த கவலையடைகிறோம்.

எவ்விதத்திலும் நியாயப்படுத்தப்பட முடியாத ஹமாஸ் இயக்கத்தின் ஏவுகணைத் தாக்குதல்களைக் கண்டிக்கும் அதேவேளை, அப்பாவி பலஸ்தீனியர்கள் மீது வலிந்து திணிக்கப்பட்டிருக்கும் போரும் அதன் விளைவான உயிர்பலிகளும் காயங்களும் காட்டாய இடப்பெயர்வும் நாகரீகமடைந்த எந்தவொரு சக்தியாலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை.

காசா என்ற திறந்தவெளி சிறையில் பல பத்தாண்டுகள் சொல்லொணா துயரத்தில் வாடும் பாலஸ்தீனியர்கள் மீது அண்மைய தாக்குதலின் தொடர்ச்சியாகத் திணிக்கப்பட்டிருக்கும் தடைகள் அவர்களின் அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறுகின்றன.

அங்கே வசிக்கக் கூடிய இரண்டு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் உணவு, நீர், மருத்துவம் போன்ற அத்தியாவசியத் தேவைகளைக் கூட அடைய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியான விமான–ஏவுகணைத் தாக்குதல்கள் வசிப்பிடங்களையும் ஏலவே பற்றாக்குறையால் வாடும் மருத்துவ மனைகளையும் தொடர்ந்தும் இலக்குவைத்துள்ளன.

இது ஒரு மாபெரும் மனிதப் பேரழிவை நோக்கி பாலஸ்தீனிய பொது மக்களை இட்டுச்செல்வதையிட்டு நாங்கள் வருத்தமடைகிறோம்.

போரின் மூலம் நிலைத்திருக்கக் கூடிய தீர்வுகளை எட்டமுடியாது என்ற பட்டறிவின் அடிப்படையில் உடனடியாகச் சம்பந்தப்பட்ட இரு தரப்பும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருவது கட்டாயமாகும்.

அதேவேளை, சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு மதிப்பளித்து இரு தரப்பிலும் பலவந்தமாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பொது மக்களை எந்தவித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யுமாறும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

அரை நூற்றாண்டுகள் கடந்தும் முடிவுறாது தொடரும் பலஸ்தீன–இஸ்ரேல் பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வொன்றைச் சர்வதேச சமூகம் தாமதிக்காது பெற்றுக் கொடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் மீளவும் ஒரு மனிதப் பேரவலம் ஏற்படாதவாறு தடுக்கும் பாரிய பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கு இருக்கின்றது என்பதை நாங்கள் நினைவுறுத்துகிறோம்.

ஒரு சிறு நிலப் பரப்பில் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பிராந்தியத்தின் ஒட்டுமொத்த அமைதிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஊறுவிளைவிக்கக் கூடிய இந்தப் போரானது அழிவுகளைத் தவிர வேறொன்றையும் விட்டுசெல்லப் போவதில்லை என்பதை நாங்கள் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பொருத்தமான உடனடி நடவடிக்கைகளின் மூலம் வளைகுடாவில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் வலியுறுத்துகிறோம் .– என்றுள்ளது.

# உள்ளூராட்சி உறுப்பினர் கால்வாயில் சடலமாக மீட்பு!

களுத்துறை, மீகதென்ன – வல்லாவிட உள்ளூராட்சி சபையில் மக்கள் விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவப் படுத்திய உறுப்பினர் ஒருவர் நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்த நபர் பிரதேசத்தில் உள்ள கால்வாயில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று வெலிபன்ன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் வலல்லாவிட்ட, போபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 70 வயதுடைய ஐ.ஏ.வீரசிறி என்று பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில், உயிரிழந்தவர் வெலிப்பன்ன, ஊராகொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு சென்றிருந்த போதே அவர் காணாமல் போனமை தொடர்பில், நேற்று முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், உயிரிழந்தவர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது அருகில் உள்ள கால்வாயில் இருந்து சடலம் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், சடலம் பிரேத பரி சோதனைக்காக களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# வீரபுரம் கிராம மக்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகள் வழங்குவதற்கு நடவடிக்கை

வீரபுரம் கிராம மக்களுக்கு ஒதுக்கப்பட்ட விவசாய காணிகளை வழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் தலையீட்டால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வீரபுரம் கிராம மக்களுக்கு 1994 ஆம் ஆண்டு அரசால் ஒதுக்கப் பட்ட விவசாய காணிகள் யுத்த காலத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாக மக்கள் பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டது.

மீண்டும் மீள்குடியேறிய மக்களுக்கு அந்தக் காணிகளுக்கு செல்வதற்கு தடை ஏற்படுத்தப்பட்டு வந்தது.

இதனால் மக்களின் காணிகள் பல ஏக்கர் மாற்று இனத்தவரால் சுவீகரிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.



இந்த நிலையில் நீண்ட கால முயற்சியின் பலனாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் தலைமையில் வவுனியா மாவட்ட அரச அதிபர், வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர், கிராம அலுவலர் மற்றும் பொது அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் குறிப்பிட்ட இடத்துக்கு நேரடியாகக் களவிஜயம் செய்து நிலைமைகளை அவதானித்தனர். பொது அமைப்புக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தனர்.

இதன் பிரகாரம் இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காகப் பல ஆண்டுகளுக்கு முன்பு வீரபுரம் மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட காணிகளை வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச அதிபரால் தெரிவிக்கப் பட்டது.

# உள்ளூராட்சி செயற்றிறன் மதிப்பீட்டில் கல்முனை மாநகர சபை முன்னிலையில்

(ஏ.எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான செயற்றிறன் மதிப்பீட்டில் கல்முனை மாநகர சபை முதலாம் படிநிலைக்கு உள்வாங்கப்பட்டுள்ளது.

உளளூராட்சி மன்றங்களுக்கு இடையே செயற்றிறன் மதிப்பீட்டை மேற்கொண்டு, அதற்கமைவாக இந்த மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் மற்றும் ஏனைய வளங்களை உள்ளூர் அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு திட்டத்தின் ஊடாக வழங்கும் செயற்பாடு வருடா வருடம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் கடந்த காலங்களில் 02ஆம், 03ஆம் படி நிலைகளில் இருந்து வந்த கல்முனை மாநகர சபை இந்த வருட ஆரம்பம் முதல் மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தலைமையில் செயற்படுத்தி வந்த நிர்வாக சீர்படுத்தல்கள், சீரான ஆளணி முகாமைத்துவம், திட்டமிட்ட அடிப்படையிலான உட்கட்டமைப்பு விருத்திகள், நவீனமயப்படுத்தப் பட்ட முகப்பு அலுவலக வசதிகள் என்பவற் றோடு மாநகர சபையின் உத்தியோகத்தர் மற்றும் ஊழியர் குழாத்தின் அயராத முயற்சிகளின் பயனாக இவ்வருட செயற்றிறன் மதிப்பீட்டில் பாரிய வளர்ச்சி வீதத்தை வெளிப்படுத்தியதன் அடிப் படையிலேயே முதலாம் படி நிலைக்கு உள்வாங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு முதலாம் படி நிலைக்கு தெரிவாகியுள்ள உள்ளூராட்சி மன்றங் களுக்கான விசேட நிதி ஒதுக்கீடுகள் மற்றும் வளங்களைப் பெறுவதற் கான வாய்ப்பை கல்முனை மாநகர சபையும் பெற்றுள்ளது என்று உதவி ஆணை யாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் தெரி வித்தார்.

# மொட்டுவிடம் ரணில் வலிந்து சென்று பதவி கேட்கவில்லை

## ஐ.தே.க. பதிலடி

"ரணில் விக்கிரமசிங்க வலிந்து சென்று, மொட்டுக் கட்சியிடம் எந்தவொரு பதவியையும் கேட்கவில்லை. அக்கட்சியினரே பதவிகளை ஏற்குமாறு கோரினர். எனவே, நாடா, அமைச்சுப் பதவியா என்பது குறித்து அக்கட்சியே முடிவெடுக்க வேண்டும்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

சுகாதார அமைச்சுப் பதவியில் இருந்து கெஹலிய ரம்புக்வெல நீக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் மொட்டுக் கட்சி அதிருப்தியை வெளியிட்டுள்ளது. அத்துடன், மொட்டுக் கட்சிக்குரிய அமைச்சுப் பதவியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்கிய ஜனாதிபதியின் முடிவு தவறு என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பாலித ரங்கே பண்டார,



"ஜனாதிபதி பதவியை ரணில் விக்கிரமசிங்க பலவந்தமாகப் பெறவில்லை. வெற்றிலை வைத்து எவரிடமும் அவர் கையேந்தவும் இல்லை. அவர்கள் (மொட்டுக் கட்சியினர்) தாமாக அழைத்தே எமது ஜனாதிபதிக்குப் பதவிகளை வழங்கினர். ஆக நாடா, அமைச்சுப் பதவியா என்பது குறித்து அக்கட்சியினர்தான் முடிவெடுக்க வேண்டும்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எம்.பி. பதவியை...

செயற்பாட்டு அரசியலில் பங்களிப்புச் செய்ய முடியாமல் இருக்கின்றார். எனவே, அவர் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை உடனடியாகத் துறக்க வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாகக் கோரியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றில் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்ற போது, 288 நாடாளுமன்ற நாட்களில் வெறுமனே 39 நாட்களில்தான் நாடாளுமன்றத்துக்கு இரா.சம்பந்தன் வருகை தந்திருக்கின்றார் என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெறப்பட்டுள்ள தகவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், அவருடைய வருகை வீதம் 13.6 சதவீதமாக உள்ளது. அவ்வாறான நிலையில் அவருக்கு நாடாளுமன்ற படிகளாக 4 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள், தொலைபேசி மற்றும் போக்குவரத்து உள்ளிட்டவற்றுக்காக 4 இலட்சத்து 19ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இது மக்களின் வரிப்பணமாக உள்ளது. ஊழல் தடுப்புப் பற்றி பேசப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் இதுவொரு மாற்று வடிவமாக அமைகின்றதா? என்று வினவப்பட்டபோது பதிலளிக்கையிலேயே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சம்பந்தனின் முதுமை காரணமாக அவர் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்துக்கு வருகை தர முடியாதிருக்கின்றமை தொடர்பில் நாங்கள் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றோம். விசேடமாக நான் அந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றேன்.

அந்தவகையில் நான் ஒரு விடயத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்புகின்றேன். சில ஆண்டுகளுக்கு முன்னதாக அவரால் நாடாளுமன்றத்துக்குச் சமூகமளிக்க முடியாத நிலைமைகள் ஏற்பட ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் நான் சம்பந்தனிடத்திலேயே நேரடியாகப் பதவி விலகுமாறு கோரினேன். அதன்போது சம்பந்தன் அதனை நிராகரித்திருந்தார். அத்துடன், அவர் அதற்கான காரணத்தையும் தெளிவுபடுத்தினார்.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது திருகோணமலை மக்கள் தன்னை அந்த மாவட்டத்தின் முதலாம் நபராகத் தெரிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் தனது உடல் நிலைமைகளை அறிந்தே தெரிவு செய்திருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். அதனை சம்பந்தன் மீண்டும் நினைவுபடுத்தினார்.

எனினும், திருகோணமலை மக்களைப் பிரதிநிதித்துவம் செய்து செயற்படத்தப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. பிறிதொரு பிரதிநிதியை நாங்கள் நியமித்தாலும் அவர் முழுமையான செயற்பாடுகளை ஆற்றுவரா என்பது பற்றிய பல கரிசனைகள் உள்ளன.

எவ்வாறாயினும், சம்பந்தன் தனது முதுமை நிலைமை காரணமாக அவரால் செயற்பாட்டு ரீதியான விடயங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. ஆகவே, அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை உடனடியாகத் துறக்க வேண்டும் என்பதுதான் எனது தனிப்பட்ட கருத்தாகவுள்ளது. அடுத்துவரும் காலத்தில் அது தொடர்பான சில நடவடிக்கைகளை எடுப்போம்." – என்றார்.

### மதுபோதையில்...

உத்தியோகத்தர்களுடன் முரண்பட்ட இருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

நோயாளி ஒருவரைப் பார்வையிடுவதற்காக வைத்தியசாலை வளாகத்துக்குள் மது போதையில் அத்துமீறி நுழைந்த இருவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் அளிக்கப்பட்டு இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### இலங்கைக்குள்...

எனினும், சீனா ஒக்டோபரில் இந்தக் கப்பல் இலங்கை வருவதற்கான அனுமதியைக் கோரியிருந்தது.

சீனாவின் ஆராய்ச்சிக் கப்பலின் இலங்கை விஜயம் குறித்து கடும் அதிருப்தியை இந்தியா வெளியிட்டிருந்தது. இந்நிலையில், இந்தக் கப்பலின் இன்றைய இலங்கை விஜயம் குறித்து இந்தியா முழு அவதானம் செலுத்தியுள்ளது என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### மூதாட்டி திடீரென...

அறிக்கையிட்டனர்.

இந்நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனையில் மாரடைப்புக் காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# யாழ்ப்பாணத்தில் நாடகத் திருவிழா...

(எஸ். நிதர்ஷன்)

கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் டவர் மண்டப அரங்க மன்றத்தின் அபேக்ஷா தமிழ் நாடகத் திருவிழா யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இன்று காலை ஆரம்பித்து வைக்கப்பட்ட நாடகத் திருவிழா நாளையும் நாளை மறுதினமும் (25,26,27) தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.

கலாசார அமைச்சின் நாடக மத்திய நிலையமாக விளங்கும் டவர் மண்டபத்தின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் கலாநிதி சண்முகசர்மா ஜெயபிரகாஷ் தலைமையில் ஆரம்பமாகிய இந்த நாடகத் திருவிழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல கலந்து சிறப்பித்திருந்தார்.



கொழும்பில் எல்பிஸ்டன் மற்றும் டவர் அரங்கில் வருடந்தோறும் நடைபெறும் நாடகத் திருவிழாவானது டவர் மண்டப அரங்க மன்றத்தின் ஏற்பாட்டில் முதற்தடவையாக இந்த முறை யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்றது.

வட மாகாண சிரேஷ்ர பிரதிப் பொலிஸ்மா அதிபர் மைத்திரி குணரட்ன, கலாநிதி ஆறுதிருமுருகன், யூனியன் கல்லூரி அதிபர் வரதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன் உட்பட கல்வி மற்றும் கலாசார அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அலி சப்ரி விலகுவதே மேல்

'ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே கண்ணா?' - என்று ஒரு சினிமா பாடல் அடி உண்டு. இன்று இலங்கையின் நிலையும் அதுதான்.

'கடன் பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன்' என்பார்கள். அது மாதிரி சீனா விடம் இலங்கை பெரும் கடன் பட்ட நிலையில், இன்றைய இலங்கை வேந்தனான ரணில் விக்கிரம சிங்கவும், அவரது அரசுத் தரப்பினரும் சீனா ஆட்டு வித்த மாதிரியெல்லாம் ஆடும் நிலையில்தான் சிக்குண்டு கிடக்கின்றனர் என்பது அப்பட்டமான உண்மை. வெளிப்படையாகத் தெரியும் விடயம்.

சீன ஆய்வுக் கப்பலான 'ஷி யான் - 6' இன் கொழும்பு வருகை, இலங்கை மீதான சீனாவின் ஆதிக்கத்தை வெளிப்படையாக அம்பலப்படுத்தும் விடயம்.

இந்தக் கப்பல் எதற்கு வருகின்றது, என்ன செய்யப் போகின்றது என்பவை எல்லாம் வேறு விடயங்கள்.

ஆனால் ஆள்புல ஒருமைப்பாடும் இறைமையும் கொண்ட நாடாகத் தன்னை கூறிக் கொள்கிறது இலங்கைக்கு இது ஓர் அவமானம்.

அந்தக் கப்பல் வருவது, இங்கு தங்குவது, சேவை களை பெற்றுக் கொள்வது, ஆய்வு உட்பட சர்ச்சைக் குரிய பல விடயங்களில் ஈடுபடுவது போன்றவை தொடர்பில் இந்த இறைமையுள்ள நாட்டின் அரசுக்கு அதிகாரமோ செல்வாக்கோ இருப்பதாகத் தெரிய வில்லை. சீனத் தரப்பு சொல்வதைக் கேட்டு, அடங்கி ஒடுங்கி, அதன்படி செயல்படும் எடுபிடி நிலையில் தான் ரணிலும் அவரது அரசும் இருக்கின்றமை கண்கூடாக தெரியும் உண்மை.

இந்த கப்பலுக்கு இலங்கை வருவதற்கு ஒக்டோபரில் அனுமதி கிடையாது, அது நவம்பர் இறுதியில்தான் நாட்டுக்குள் வர முடியும் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பகிரங்கமாக அறிவிக்கின்றார். அதே சமயம் இக்கப்பல் இன்றைய திகதியில் - ஒக்டோபர் 25ஆம் திகதி இலங்கைக்கு வருகின்றது என்றும், நாளை 26ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தில் அதற்கு வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது என்றும் நமது பத்திரிகையில் கூட இரண்டு வாரங்களுக்கு முன் செய்தி வெளி யாகியிருந்தது.

ஆனால் இலங்கை வெளிவகார அமைச்சரோ இல்லை அடுத்த மாதம்தான் அதற்கு அனுமதி என்று பெரிதாகப் பீற்றிக் கொண்டார்.

கடைசியில் என்ன நடக்கிறது? சீனத் தரப்பு அறிவித்தபடி - இலங்கை தரப்பு அறிவித்தமைக்கு மாறாக - இன்று பிற்பகலில் அக்கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்குள் நுழைகின்றது. அதைத் தடுக்கும் நிலையில், அல்லது நவம்பரில் வரும்படி திருப்பி அனுப்பும் நிலையில், இலங்கை வெளிவிவகார அமைச்சும் இல்லை. இலங்கை அரசும் இல்லை.

சீனாவுக்குப் பெட்டிப் பாம்பாக கொழும்பு ஆட்சிப் பீடம் செயல்படுவது இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் ராஜதந்திரத்திற்கு பெரும் தோல்வி என்பது உண்மை.

தன்னுடைய வெளிவிவகார அமைச்சர் பதவியின் மாண்பை தமது செல்லுபடியற்ற அறிவிப்புகள் மூலம் தரம் குறைக்க வைத்த அமைச்சர், தமது அதிகாரத்தை மீறி நடக்கும் இந்த அழுத்த நடவ டிக்கைகளுக்குப் பொறுப்பேற்று, தமது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். அதுவே தார்மீகப் பொறுப்பும் கடமையுமாகும். செய்வாரா? தெரிய வில்லை.

## காட்டு மாடுகளை வேட்டையாடிய பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வனவிலங்கு அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவி மிக நீண்ட நாள்களாக காட்டு மாடுகளை வேட்டையாடிய பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது செய்யப் பட்டுள்ளார்.

வெட்டிய இறைச்சியை பொதியாக்கி தனது மனைவியின் வீட்டிலுள்ள குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விற்பனை செய்து வந்த தெஹியத்தக்கண்டிய சிவில் பாதுகாப்பு திணைக்கள பாதுகாப்பு உத்தியோஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளால் கடந்த செவ்வாய்க்கிழமை (24) கைது செய்யப்பட்டுள்ளார்.

வன விலங்கு பாதுகாப்பு திணைக்களத்துக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட வன விலங்கு பாதுகாப்பு உதவி அத்தியட்சகர் பீ.ஸி.விமலதாஸவின் பணிப்புரையின் பேரில் இரவு வேளையில் வன விலங்கு பாதுகாப்பு உத்தியோஸ்தர்கள் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது குளிர்சாதனப் பெட்டியில் தனித்தனியாக ஒவ்வொரு கிலோவாக பொதி செய்யப்பட்டிருந்த 7 கிலோ இறைச்சியை மீட்டனர். அத்துடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

## 'தூரிகை வரையும் மின்மினிகள்' ஹைக்கூ கவிதை நூல் வெளியீடு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

டாக்டர் ஜலீலா முஸம்மில் எழுதிய 'தூரிகை வரையும் மின்மினிகள்' என்னும் ஹைக்கூ கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை (28) மாலை 3. 30 மணிக்கு ஏறாவூர் வாவிக்கரை வீதியில் அமைந் துள்ள கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறும்.

ஏறாவூர் கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி எம்.ஐ.எம். மஹ்பூழ் தலைமையில் நடைபெறும் இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு ஏறாவூர் பிரதேச செயலர் நிஹாரா மௌஜூத் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

நிகழ்வில் கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலர் எஸ்.எச். முஸம்மில், உதவி பிரதேச செயலர் ஏ.சீ. அஹமட் அப்கர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக், காத்தான்குடி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷேக் எஸ்.ஏ.எம். நழீம் (நளீமி), ஏறாவூர் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சி.எம். றிஸ்வான் (மதனி), கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷேக் எம்.எச்.எம். நியாஸ் (நளீமி), ஏறாவூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷேக் ஜவாஹிர் (பலாஹி), நாவலாசிரியர் கவிஞர் அஸீஸ் எம். பாயிஸ், ஓய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நஸீரா எஸ். ஆப்தீன், சாய்ந்தமருது மழ்ஹறுஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய அதிபர் றிப்கா அன்சார், மட்டக்களப்பு அஞ்சல் பயிற்சிக் கல்லூரி போதனாசிரியர் கே. பாத்திமா ஹஸ்னா, கொழும்பு முத்தமிழ் கலசம் இதழாசிரியர் கவிதாயினி ஏறாவூர் ஓய்நிலைக் கோட்டக்கல்வி அதிகாரி கவிமணி எஸ். ஏ. றஸாக் ஆகியோரும் கலந்துகொள்வர்.





# ஓய்வு நிலையில் பாராட்டு

சம்மாந்துறை வலயக் கல்வி அலு வலகத்தில் விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகராக நீண்டகாலம் கடமை யாற்றி ஓய்வு பெறும் எஸ்.எல். அக்ப ருக்கு இன்று (25) புதன்கிழமை பிரி யாவிடை நிகழ்வு நடைபெற்றது.

ஓய்வு நிலைக்கு செல்லும் நிகழ்வு வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா முன்னிலையில் இடம்பெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான மஜீட் , அரபாத், நிலோபரா மற்றும் உதவிக்கல்விப் பணிப்பாளர் பி. பரமதயாளன் உள்ளிட்ட கல்வி சார் உத்தியோகத்தர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஓய்வு பெறும் ஆசிரிய ஆலோசகர் அக்பர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். வலய கல்விசார் உத்தியோகத்தர்கள் நலன்புரி சங்க தலைவர் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவ ராஜா, ஆசிரிய ஆலோசகர்களான மன்சூர் றயிஸ்டீன் ஆகியோர் உரையாற்றினர்.





# வறுமை ஒழிப்புத் திட்டத்தில் ஏறாவூரில் வீடுகள் கையளிப்பு

(எம். எப்.நவாஸ்)

ஏறாவூர் பிரதேச செயலக பிரிவில் சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சமுர்த்தி திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் 'ஜெயவிமன' வீடமைப்பு திட்டத்தின் கீழ் 03 வீடுகளும், சமுர்த்தி லொத்தர் வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு வீடும் பயனாளிகளிடம் நேற்றுக் (24) கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி நிஹாறா மௌஜூத் தலைமையில் நடைபெற்றது.

இதில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் மு. கணேஷமூர்த்தி, சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி யு.ஆ.நிஹாறா, தொழிநுட்ப உத்தியோகத்தர் திரு. தினேஷ், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அஸீஸ், சமுர்த்தி சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் ஜெஸீல், அபிவிருத்தி உத்தியோகத்தர் தாரிக், கிராம சேவையாளர் ஷாபி மற்றும் வெளிக்கள சமுர்த்தி உத்தியோகத்தர்களான நஜிமா, அறூசியா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# விரிவுரை இணைப்பாளர் நியமனம்



(அ.அஸ்வர்)

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரியின் தொடருறு கல்விக்குப் பொறுப்பான விரிவுரை இணைப்பாளராக சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.முஹம்மது நியாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வியியற் கல்லூரி பீடாதிபதியும் சட்டத்தரணியுமான கே. புண்ணிய மூர்த்தியால் வழங்கப்பட்ட கடிதத்தின் பிர காரம் இவர் கடந்த திங்கட்கிழமை (23) தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# பொத்துவில் உப பஸ் டிப்போ விரைவில் பிரதான டிப்போவாக!

## நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப்

(கே. எ. ஹமீட் )

பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாக தர்முயர்த்தும் நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று திகாமடுல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். எம். முஷாரப் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் உப பஸ் டிப்போவானது பிரதான டிப்போவாக தரமுயர்த்துவதற்கான தீர்மானம் கடந்த வருடம் அமைச்சு மட்டத்தில் எட்டப்பட்டது. நாட்டின் பொருளாதார பிரச்சினை காரணமாக பொத்துவில் பஸ் டிப்போவில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திக் கென பணம் ஒதுக்குவதில் சிரமங்கள் இருந்தன.

குறித்த காலப் பகுதியில் பொத்துவில் பஸ் டிப்போ அமைந்துள்ள நிலத்தின் சட்ட ரீதியான உரிமை மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் குறித்த பஸ்டிப்போவின் துரித அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான முதற்கட்ட நிதியாக சுமார் 60 மில்லியன் ரூபாவை நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரபின் வேண்டுகோளுக்கமைய ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மிகுதிப் பணம் வரும் வரவு - செலவு திட்டத்தில் உள்வாங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில தினங்களில் பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாக தர்முயர்த்தும் நிகழ்வு உத்தியோகபூர்வமாக இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஒலுவில் கிளைகள் புனரமைப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர், கே. எ. ஹமீட் )

ஒலுவில் பிரதேசத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைகள் புனரமைப்பு செய்வதற்கான முதற்கட்ட கூட்டம் ஒலுவில் 06 ஆம் கிராமசேவகர் பிரிவில் (21) சனிக்கிழமை நடைபெற்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீமின் விசேட பணிப்புரையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளர் ஏ.சி. சமால்தீன், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எல். அமானுல்லா, ஒலுவில் அமைப்பாளர் ஏ.சீ. சுபைர், ஒலுவில் மத்திய குழுவின் தலைவர் ஏ.எல். ஜெமில் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஒலுவில் 06 ஆம் பிரிவின் ஆலோசகர்களாக எஸ். ஆதம்பாவா, முன்னாள் தவிசாளர் ஏ.எல். அமானுல்லா, ஆசிரியர் ஏ.எச். எம்.பஹ்மி, ஏ.எல். ஜெமில் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ஐ. பௌஸர், செயலாளராக ஏ.பீ.எம். ரபீய், பொருளாளராக யூ.எல்.எம். றஃமான், உதவித் தலைவராக யூ.எல். ஹுசைன், உதவிச் செயலாளராக ஜே. அமீன், கொள்கை பரப்புச் செயலாளராக ஐ.எல். ஜெப்ரி, இளைஞர் அமைப்பாளராக ஏ.எச்.எம். குர்ஷித் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏ.எல்.தௌபீக், ஏ.ஜே.ஜெப்பீர், ஏ.எம்.இக்பால், ஏ.எஸ்.நஸ்லிம், ஜே.சஜீர், யூ.எல்.ஏ.கபூர், ஐ. நஜாத், ஏ.எல்.ஆசிக், எம்.ஐ.எம்.ஹனூன், ஜே.அத்தான், ஐ.எல்.அலாவுதீன், ஏ.எச். எம். றுக்ஸான் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை ஒலுவில் 01 ஆம் கிராம சேவகர் பிரிவுக்கான புனரமைப்புக் கூட்டம் 22 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்சியின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளர், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளர் ஏ.சி. சமால்தீன், ஒலுவில் அமைப்பாளர் ஏ.சீ. சுபைர், ஒலுவில் மத்திய குழுவின் தலைவர் ஏ.எல். ஜெமீல் ஹாஜி கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகத்தை மீளுருவாக்கம் செய்ய நடவடிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

எழுத்தாளரும் ஆய்வாளருமான சாய்ந்தமருது மர்ஹூம் டாக்டர் அபூபக்கரால் மிக நீண்ட காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகத்தை மீளுருவாக்கம் செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

டாக்டர் அபூபக்கரின் புதல்வர் டாக்டர் எம்.ஏ.எம் முனீர் தலைமையில் பம்பலப்பிட்டியில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது டாக்டர் அபூபக்கரால் வெளிவரா நூல்களை வெளியிடுவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

டாக்டர் அபூபக்கர் பற்றிய நூல் ஒன்றை வெளியிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. அத்துடன் பல் வேறு இலக்கிய முயற் சிகளை முன்னெடுத்துச் செல்வதுபற்றியும்கலந்துரையாடப்பட்டது.

டாக்டர் எம்.ஏ.எம். முனீர் தலைவராகவும், முனீரா அபூபக்கர் செயலாளராகவும் இம்ரான் நெய்னார் பொருளாளரகவும் அறிவிக்கப்பட்டனர்.





# இரத்தத்தை சுத்திகரிக்கும் இயந்திரம் கந்தளாய் ஆதார வைத்தியசாலைக்கு

(ஹஸ்பர்)

சிறுநீரக நோயாளர்களின் இரத்தத்தை சுத்திகரிக்க உதவும் இரத்த சுத்திகரிக்கும் இயந்திரம் கந்தளாய் ஆதார வைத்தியசாலைக்கு நேற்று (24) வழங்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள தலைமையில் இது வழங்கப்பட்டுச் செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கந்தளாய், தம்பலகாமம், சேருவில போன்ற பிரதேச செயலர் பிரிவுகளில் வசிக்கும் பெருந்தொகையான மக்கள் தமது பிரதான வைத்தியசாலையாக கந்தளாய் ஆரம்ப வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருகின்றனர்.

இவர்களில் சிறுநீரக நோய்க்கு சிகிச்சை பெறவரும் நோயாளிகள் கந்தளாய் வைத்தியசாலையில் இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரம் இல்லாத காரணத்தால் பொலன்னறுவை, அனுராதபுரம், திருகோணமலை போன்ற தூர வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டி இருந்தது.

இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அதற்கு அமைய ஐ.ஓ.சி எரிபொருள் கம்பனியிடம் அவர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, கந்தளாய் தள வைத்தியசாலைக்கு நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பின் அடிப்படையில் புதிய இரத்தம் வடிகட்டும் இயந்திரம் வழங்கப்பட்டது.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜெ.ஜெ.முரளிதரன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொரளை அஹதிய்யாவின் 37ஆவது மீலாதுந் நபி விழா

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பொரளை அஹதிய்யா இஸ்லாமிய கல்வி நிலையத்தால் 37 ஆவது மீலாதுந் நபி விழா தெமட்டகொட அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. மாநாட்டு மண்டபத்தில் (22) ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது.

ருவனிகம சமாதி நாயக்க தேரர், சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள், அல்–ஹாஜ் அஷ்–ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்–காதிரி மற்றும் பேராயர் ஜே. ஞானராஜா பாதிரியார் உட்பட்ட சர்வ மத தலைவர்களின் தலைமையில் இவ் விழா நடைபெற்றது. அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்–ஹாஜ் ஷிப்லி ஹாஷிம் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில் அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.






# பொலிஸாரால் மர நடுகை வேலைத்திட்டம் ஆரம்பம்!

(பாறுக் ஷிஹான்)

இயற்கையை நேசித்து சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ எண்ணத்தில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் தலைமையில் பொலிஸாரால் மர நடுகை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் பிரிவுப் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஐ நசார் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மர நடுகை ஆரம்ப நிகழ்வு திங்கட்கிழமை (23) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் போது சம்மாந்துறை பொலிஸ் நிலைய சிறு குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எமு.நௌபீர், சம்மாந்துறை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பெறுப்பதி காரி உப பொலிஸ் பரிசோதகர் ஏ.டி.ஆர் விஜயவர்த்தன மற்றும் பொலிஸ் உத்தியோகத்தகர் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளை அழகுபடுத்தும் நோக்குடன் இந்தத் திட்டம் முன்னெக் கப்பட்டுள்ளது. சுமார் 200 இற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.




# ரோட்டரிக் கழகங்களின் ஏற்பாட்டில் சுன்னாகத்தில் போலியோ விழிப்புணர்வு

(த.சுபேசன்)

போலியோ தினத்தை முன்னிட்டு ரோட்டரிக் கழகங்களின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை (23) சுன்னாகம் நகரில் போலியோ தொடர்பாக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையில் போலியோ இல்லாமல் போனதற்கு ரோட்டரிக் கழகம் பெரும் பங்காற்றியது என்ற அடிப்படையிலும் அத்துடன் உலகளாவிய ரீதியாக 99.4 சதவீத மக்கள் போலியோவில் இருந்து நிவாரணம் பெற ரோட்டரியின் பங்களிப்பு அதிகம் என்ற அடிப்படையிலும் அதனை நினைவூட்டும் முகமாகவும் விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

போலியோ தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம், நல்லூர் ரோட்டரிக் கழகம், யாழ்ப்பாணம் பெனிசுலா ரோட்டரக் கழகம் மற்றும் சுன்னாகம் ரோட்டரக் கழகம் ஆகியன கலந்து கொண்டன.



# பால் நிலைகளில் பாகுபாடு பாடசாலைகளுக்கும் பங்குள்ளது....?

"ஆம்பிள பிள்ளைகள் இதில line பண்ணுங்க, பொம்பிள பிள்ளைகள் இதில line பண்ணுங்க" என்பது காள்கோள் விழாவின் போது தரம் ஒன்றில் பாடசாலைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொரு மாணவர்களும் கேட்கும் முதல் வார்த்தையாக அமைகிறது.

சமூகம் என்பது பல தனிமனிதர்களின் தொகுப்பாகும். ஒவ்வொரு தனிமனிதனது வாழ்வும் முறையாக சமூகமயப்படுத்தப்படும் போது ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குதல் ஏதுவாக அமைகிறது.

அதனடிப்படையில் சமூகமொன்றில் ஒரு மனிதன் தானும் ஒரு அங்கத்தவனாக இணைந்து வாழ எடுக்கின்ற முயற்சி, அல்லது அவனுக்கு சமூகம் வழங்கும் பயிற்சி சமூக மயமாதலாகும்.

மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை சமூகத்தில் இருந்து விடுபட்டு தனிமையாக வாழும் வாழ்க்கை சாத்தியமற்றது என்பது இங்கு உறுதியாகின்றது.

இவ்வாறு மனிதனை சமூகமயமாக்குவதில் முக்கிய பங்காளிகளாக குடும்பம், உறவுகள், பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், ஊடகங்கள், மத நிறுவனங்கள், நண்பர் குழுக்கள் போன்றன காணப்படுகின்றன. இவற்றுள் முதல் அலகாகக் குடும்பமும் இரண்டாம் அலகாக பாடசாலைகளும் அமைகின்றன.

குடும்பத்தில் தனக்கு பழக்கப்பட்ட தனது உறவினர்கள் மூலமாக ஆளுமை மனப்பாங்கு, ஒழுக்க விழுமியங்கள் போன்றவற்றைக் கற்றுக் கொண்டு ஒரு வட்டத்தினுள் வாழ்ந்த குழந்தை அதன் அடுத்த கட்டமாகச் சமூகத்திலுள்ள பலதரப்பட்ட மக்களை, பலதரப்பட்ட பழக்க வழக்கங்களை, நடத்தைகளைக் கற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் பிரயோகிக்கக் கூடிய அடுத்த தளமாக பாடசாலைகள் காணப்படுகின்றன.

அந்தவகையில் பாடசாலைகள் அறிவை மட்டுமல்லாது எதிர்கால சமூகத்துக்கான புத்துருவாக்க சிந்தனைகளை மாணவர்களுக்குள் விதைக்கும் அடிப்படை நிறுவனம் எனும் பங்கையும் ஏற்றுக் கொள்கின்றது.

மாணவர்களுக்குப் பாடசாலைகளில் வழங்கப்படும் பதவிகள், போட்டிகள், ஆற்றல்களை வெளிக்கொணரும் செயற்றிட்டங்கள், ஒழுக்கவியல் பண்புகள் உட்பட பாடசாலையில் அன்றாடம் கற்றுக் கொள்ளும் ஒவ்வொரு சிறிய சிறிய செயற்பாடுகளும் மாணவர்களின் சமூக நடத்தைகளில் பிரதிபலிக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைய பால் மற்றும் பால் நிலை சார்ந்த அறிவூட்டல்கள், வெளிப்பாடுகள், பாகுபாடுகள், பிறழ்வு நடத்தைகள்,நேர் மற்றும் எதிர்மறையான எண்ணப்பாடுகள் போன்றவற்றை ஒவ்வொருவரும் கற்றுக் கொள்வதிலும் பழக்கப்படுவதிலும் மற்றும் அவற்றைப் பிரயோகிப்பதிலும் பாடசாலைகள் பிரதான பங்குதாரராக அமைகின்றன.

உலகெங்கிலும் குறிப்பாக ஐரோப்பாவிலுள்ள பெரும்பாலான நாடுகளிலுள்ள பாடசாலைகளில் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் போன்றன தேசிய கல்வி அமைச்சகங்களின் பொறுப்பின் கீழ் பாடத் திட்டங்களில் கட்டாயமாக்கப்பட்டுள்ள ஒன்றாகும்.



பாலியல் நோக்குநிலை பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் பாலியல் உறவு நிலைகள் பாலியல் நடத்தை மாற்றங்கள் போன்றவற்றில் தெளிவான அறிவை வழங்கும் நிறுவனங்களாக பாடசாலைகள் காணப்படுகின்றன.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முற்போக்கான கல்வி இ யக்கம் வட அமெரிக்க பள்ளி பாடத்திட்டங்களில் பாலியல் கல்வியைப் பொது சுகாதாரம் என்று அறிமுகம் செய்தது. அன்றிலிருந்து அமெரிக்கா மட்டுமன்றி சுவீடன், நோர்வே, நெதர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளிலுள்ள மாணவர்கள் தமது 10 வயதுக்கு முன்னரே தமது உடற்கூறுகள், பாலியல் நடத்தைகள், தவறான தொடுதல்கள், பால்நிலை சார்ந்த புரிதல்கள் என்பவற்றைக் கற்றுக் கொள்கின்றனர்.

இப் பின்புலத்தில் உருவாகும் சமுதாயத்திடம் ஆணென்றும், பெண்ணென்றும் எவ்வித பாகுபாடுகளும் பெரும்பாலும் காணப்படுவதில்லை. அத்துடன் பால்நிலை சார்ந்த தெளிவான புரிதல் காரணமாக மாற்றுப் பாலினத்தவர்கள் தொடர்பான புரிதலும் இவ்வகையினரிடம் அதிகமாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஆனால் ஆசிய நாடுகளில் குறிப்பாக இலங்கை போன்ற நாடுகளில் இத்தன்மை முற்றிலுமாக வேறுபட்டே காணப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் 9800 அரச பாடசாலைகளில் 41 லட்சம் மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கப்படுகின்றது.

ஒவ்வொரு 5 கிலோ மீற்றருக்கும் ஒரு பாடசாலையென பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தடன் 2 லட்சத்து 35 ஆயிரம் ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் பால்நிலை தொடர்பான வேறுபாடுகள் பின்வருமாறு அடையாளப்படுத்தப்படுகின்றன.

ஆண்களுக்கான தனித்த பாடசாலைகள், பெண்களுக்கான தனித்த பாடசாலைகள்.

ஆண் – 61 பாடசாலைகள், பெண் – 48 பாடசாலைகள்.

இந்தப் பாடசாலைகளின் எண்ணிக்கை மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் குறைவானதாகவே காணப்பட்டாலும் றோயல் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, குருணாகல திருக் குடும்பக் கன்னியர் மடம், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிகளவிலான மாணவர் தொகையைக் கொண்ட பாடசாலைகளாகவும் இலங்கையின் மிகப்பிரபல்யம் மிக்க பாடசாலைகளாகவும் காணப்படுகின்றன.

இவ்வகையான பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களிடத்தே பால் நிலை சார்ந்த புரிதலும் அதே பால் நிலைக்கான எண்ணக்கருக்களுமே மேலோங்கிக் காணப்படுகின்றன.

இருபாலாரும் இணைந்து காணப்படும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை விடத் தனித்த பாலின பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தமது எதிர்பாலினத்தவர் தொடர்பாக அறிந்து கொள்வதற்கும் அவர்களுடன் பழகுவதற்கும் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். அத்துடன் எதிர்ப்பாலினத்தவர் மீதான துஸ்பிரயோகங்களையும் வன்நடத்தைகளையும் பிரயோகிப்பதற்கும் இவ்வகையான ஒற்றைப் பாலின பாடசாலைகள் பெருங் காரணமாகின்றன.

### பாட உள்ளடக்கங்களும் கற்பித்தல் முறைமையும்

இலங்கையின் பாடசாலைக் கல்வித் திட்டங்கள் தரம் ஒன்று முதலாகவே பால்நிலை வேறுபாடுகளை மாணவர்கள் கற்றுக்கொள்ளும் வகையிலேயே

**(12ஆம் பக்கம் பார்க்க)**

# பால் நிலைகளில் பாகுபாடு

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக இக் கல்வித் திட்டமானது பெரும்பாலும் ஆண்ணகளுக்கு முன்னுரிமை வழங்குவதாகவே கட்டமைக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக, எனது பெயர் கண்ணன், நான் இரண்டாம் தரத்தில் படிக்கிறேன், தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழை கண்டுபிடித்தார், ரைட் சகோதரர்கள், குளங்களை கட்டிய மன்னர்கள், சுதந்திரத்திற்காக போராடிய தலை வர்கள் என பாட உள்ளடக்கங்களில் 90 சதவிகிதத்துக்கும் அதிகமானவை ஆண்களின் பெருமைகளையும் ஆண்கள் சார்பான கருத்தியல்களையும் மாணவர்கள் மத்தியில் கொண்டு சேர்க்கின்றது.

அதே சமயத்தில் ஆரம்பக் கல்வி பாடத்திட்டங்களில் கட்டமைக்கப்பட்டுள்ள பெண் என்பவள் சோறு சமைப்பவ ளாகவும் (அம்மா சோறு சமைக்கிறாள்), மென்மையான பணிகளை மேற்கொள் எக் கூடியவள் என்ற பிரதி விம்பத்துட னும் கட்டமைக்கப்படுகிறது.

இடை நிலைக் கல்விப் பாடத் திட்டங்களிலும் இது போன்ற ஆண் வர்க்கக் கருத்தியல்களே பெருமளவில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அத்துடன் தரம் 9 இற்குப் பின்னரே ஆண், பெண் உடற் கூற்றியல், கட்டிளமைப்பருவ உடலியல், உளவியல் மாறுதல்கள் தொடர்பாகச் சுகாதாரமும் உடற்கல்வியும் எனும் பாடப்பரப்பு கற்பிக்க ஆரம்பிக்கப்படுகிறது.

இந்தப் பாடப்பரப்பின் உள்ளடக்கம் பால், பாலியல், பால்நிலை தொடர்பான தெளிவான விளக்கங்களை மாணவர்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்குப் போதுமானதாகவும் அமையவில்லை. அத்தோடு குறித்த பாடப்பரப்பைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் பெரும்பாலானோர் பால்நிலை தொடர்பாக சமூகம் கட்டமைத்துள்ள விம்பத்தில் இருந்து தோன்றியவர்கள் என்பதாலும், மேலும்

ஆண், பெண் மாணவர்களை ஒருங்கு சேர்த்து குறித்த அலகைக் கற்பிப்பதற்குச் சங்கடப்படுவதாலும் பால்நிலை தொடர்பான தெளிவான அறிவு மாணவர்களுக்கு கிடைக்காமலேயே போய்விடுகிறது.

## பால்நிலை மொழியாடல்களும் வேறுபடுத்தல் செயற்பாடுகளும்

மாணவர்கள் கல்வியினை மாத்திரமல்லாது அனைத்து விதமான பழக்க வழக்கங்களையும் கற்றுக்கொள்ளும் தளம் பாடசாலையாகும்.

அந்தவகையில் பால்நிலை சார்ந்த மொழியாடல்களைக் கற்றுக் கொடுக்கும் பிரதான தளங்களில் ஒன்றாக பாடசாலைகள் காணப்படுகின்றன. அத்துடன் பாடசாலைகளில் மாணவர்கள் கற்றுக் கொள்ளும் சில நடத்தைகளும் பால்நிலை வேறுபாடுகளை ஊக்குவிக்கின்றன.

மொழியாடல்கள் – மாணவத் தலைவன், மாணவத் தலைவி, வாயிற் காப்பவன், ஆசிரியர், மாஸ்ரர்.

நடத்தைகள் – ஆண்களுக்கும் பெண்களுக்குமெனத் தனியான வரிசைகள்.

ஆண்களுக்கு கறுப்புநிற பாதணி, பெண்களுக்கு வெள்ளை பாதணி.

வகுப்பறையில் ஆண்கள் ஒரு பக்கம், பெண்கள் ஒரு பக்கம்.

சைக்கிள் நிறுத்துமிடம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனியாக.

ஆண்களுக்கு ஒரு மாணவத் தலைவர், பெண்களுக்கு ஒரு மாணவத் தலைவி.

போன்ற நடத்தைகளும் மாணவர்கள் மத்தியில் ஆணுக்கானதும் பெண்ணுக்கானதும் என்று வரையறைகளைப் பள்ளிப் பருவத்தில் இருந்தே விதைக்கின்றன.

ஆணும் பெண்ணும் பேசிக் கொண்டாலே குற்றம், ஆண் பிள்ளைகளுக்கு முன்னால் அடக்கமாக அமர வேண்டும், ஆண் ஆசிரியர்களோடு பெண் மாணவர்கள் அதிகம் பேசிக் கொள்ள கூடாது, ஆண் மாணவர்கள் அடக்கமாக இருந்தால் பெண் என கேலி செய்தல், கட்டிளமைப் பருவத்தில் தோன்றும் எதிர்ப் பாலின ஈர்ப்பினை முறையாகத் தெளிவுபடுத்தாமல் அதனைத் தவறெனக் கட்டமைத்து காதல் என அடையாளப் படுத்துதல் போன்ற மாறுபாடான நடைமுறைகளையே இலங்கையின் பாடசாலைக் கல்வித் திட்டம் மென்மேலும் ஊக்குவித்துச் செல்கிறது.

பிள்ளைப் பருவத்திலுள்ள மாணவர்கள் மத்தியில் பால்நிலை மற்றும் உடலியல், பாலியல் தொடர்பான அறிவு திறம்பட விதைக்கப்படும் போது அவர்கள் இளமைப் பருவத்தை அடையும் போது துஷ்பிரயோகமற்ற, பால்நிலை பாகுபாடற்ற புதிய சிந்தனைப் புலமுடைய ஆரோக்கியமான அறிவார்ந்த தலை முறையாக மாற்றமடைவர்.

இதற்கான விதை ஒவ்வொரு பாடசாலைகளிலும் விதைக்கப்படுதல் வேண்டும்.

**கிரிஜா அருள்பிரகாசம்,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

# வாணிவிழா நிகழ்வுகள்...







ஆவரங்கால் சர்வோதய முன்பள்ளியின் வாணிவிழா நேற்று இடம்பெற்றது.



# தென் கிழக்குப் பல்கலைக்கழக 27 ஆவது வருட நிறைவு நிகழ்வு

(எம். எப்.நவாஸ், நூருல் ஹுதா உமர்)

தென் கிழக்குப் பல்கலைக்கழகம் மறைந்த மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் பால் உருவாக்கப்பட்டு 27 வருட பூர்த்தியை சிறப்பிக்கு முகமாக தென்கிழக்கு பல்கலைகழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்தாபகர் தின நிகழ்வு நேற்று பல்கலைக்கழக பிரதான கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபுபக்கர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மர்ஹூம் எம்.எச். எம். அஷ்ரப் அவர்களின் புதல்வர் அமான் அஷ்ரப் கலந்து சிறப்பித்ததுடன் மர்ஹூம் அஷ்ரப் நினைவுப் பேருரையையும் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா கலந்து கொண்டார்.

இங்கு, தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நீண்ட காலமாகக் கடமை யாற்றிவரும் விரிவுரையாளர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், ஆரம்ப கால மாணவர்கள் எனப் பலரும் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்த பல்கலைக் கழக ஸ்தாபகரின் புதல்வர் அமான் அஸ்ரப் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக் கப்பட்டார்.

இந்நிகழ்வில்பல்கலைகழக பேராசிரியர்கள்,விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள் என பெருமளவிலானோர் பங்கேற்றனர்.





# அம்பாறையில் பெரும்போக நெற்செய்கை; ஏர்பூட்டுவிழா இங்கினியாகலவில் ஆரம்பம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் 2023 – 2024 ஆம் ஆண்டுக்கான பெரும் போக நெற்செய்கைக்கான ஏர்பூட்டு விழா அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் கடந்த சனிக்கிழமை (21) இடம்பெற்றது.

மூவின மக்களும் ஒன்றிணைந்து இலங்கை வாழ் மக்களுக்கான உணவு தேவையைப் பூர்த்தி செய்வதற்காக விவசாய செய்கையை மேற்கொள்வதற்காக மழை வேண்டி பிரார்த்தனைகளும், வழிபாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அம்பாறை மாட்ட விவசாயிகள் நாட்டின் தேசிய உற்பத்தியில் பெரும் பங்களிப்பை ஆற்றிவருகின்றனர்.

இலங்கையில் 16 மாவட்டங்களில் நெற்செய்கை மேற் கொள்ளப்படுகின்ற போதிலும், அதில் அம்பாறை மாவட்டம் 25 வீத நெல் உற்பத்தியை ஈட்டி தேசிய உற்பத்திக்கு மிகவும் பங்காற்றி வருவதாத அரச அதிபர் தெரிவித்தார்.

இங்கினியாகல டீ.எஸ்.சேனநாயக



சமுத்திரத்தில் ஒரு லட்சத்து 35 ஏக்கர் சதுர அடி நீர்மட்டம் காணப்படுகின்ற போதிலும் மழையை நம்பியே அம்பாறை மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் ஒரு லட்சத்தி இருபதாயிரம் ஏக்கரில் பெரும்போக வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு செய்யும் மாவட்டமாக அம்பாறையை உருவாக்கக் காரண கர்த்தாவாக விளங்கிய இலங்கையின் முதலாவது பிரதமரான காலஞ்சென்ற டீ.எஸ்.சேனநாயகவின் ஞாபகார்த்த தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் விவசாய அமைப்புகள் மற்றும் அம்பாறை மாவட்ட செயலகம் என்பன இணைந்து இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தன.

சர்வமத பெரியார்கள் கலந்து கொண்ட நிகழ்வில் டீ.எஸ்.சேனநாயகவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து சம்பிரதாய பூர்வமாக பெரும் போக வேளாண்மைச் செய்கைக்கான ஏர்பூட்டு விழா இடம் பெற்றது.



# மாணவர்கள் கௌரவிப்பு

(சப்னா றிபாஸ்)

கல்முனை கல்வி வலயத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மூன்று ஏ சித்திகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் விழா சாய்ந்துமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

'றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எயிட்' அமைப்பின் ஏற்பாட்டில் அதன் பிரதி தலைவரும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஏ.எல்.எம்.ஐயூப்கான் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.




இந்த நிகழ்வில் றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எயிட் அமைப்பின் ஸ்தாபகரும், மயோன் குரூப் நிறுவனத்தின் பணிப்பாளருமான எம்.றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகவும் கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.ஸகதுல் நஜீம் கௌரவ அதிதியாகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபிர்,பீ.ஜிஹானா அலீப், எம்.எச். றியாஸா, என்.வரனியா, அமைப்பின் செயலாளரும், திடீர் மரண விசாரணை அதிகாரியுமான ஏ.எச்.ஜவாஹிர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதேவேளை அல் ஹிலால் வித்தியாலயத்தில் அரச விருதுகள் பெற்ற ஆசிரியர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# காரைதீவு கல்விக் கோட்டத்துக்கு புதிய பணிப்பாளர் நியமனம்





(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளராக இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த ஆனந்தகுமாரசாமி சஞ்சீவன் நியமிக்கப்பட்டார்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹறுதுல் நஜீம் முன்னிலையில், காரைதீவு கோட்டக் கல்விப் பணிமனையில் தனது கடமைகளை நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை வலய கணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் கடமைக்கு மேலதிகமாக இந் நியமனம் வழங்கப்படுகிறது.

கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜே.டேவிட் ஓய்வுபெற்றதை அடுத்து இந் நியமனம் இடம்பெற்றது.

கடமைப்பொறுப்பேற்பு நிகழ்வில் காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபீர், திருமதி வரணியா சாந்தரூபன், திருமதி எம்.எச். றியாசா உள்ளிட்ட கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





# பொருளாதாரத்தை உயர்த்த பழமரக்கன்றுகள் வழங்கல்

(வி.ரி.சகாதேவராஜா)

பெரன்டினா நிறுவனத்தின் அனுசரணையுடன், வீட்டு மனைபொருளாதாரத்தை உயர்த்த 200 பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு அவர்களின் வீட்டு மனை பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் பழ மரக்கன்றுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (23) நடைபெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகியின் வழிகாட்டலுக்கு அமைய உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன் தலைமையில் விதாதா வள மத்திய நிலையத்தில் இந் நிகழ்வு நடைபெற்றது.

பெரன்டினா நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெரன்டினா நிறுவனத்தின் முகாமையாளர் கோ.கோபிகரன், வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெயரூபன் கலந்து கொண்டனர்.

அதேவேளை,விவசாய உத்தியோகத்தர் திருமதி.சமேதா கீர்த்தனன் வீட்டு பொருளாதாரத்தை உயர்த்தும் வழிமுறைகள் குறித்து விளக்கமளித்தார்.

இந்த நிகழ்வில் விதாதா வெளிக்கள இணைப்பாளர் கே.நவநீதன், சுற்றாடல் உத்தியோகத்தர் கே.சிறீகரன், கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.ஷினாஸ், கிராம சேவை உத்தியோகத்தர் ஏ.பிரசன்னா உட்பட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெரன்டினா நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.






# சிலாவத்துறை பாடசாலையில் இரண்டு மாடிக் கட்டடம் திறப்பு

மன்னார் சிலாவத்துறை மத்திய மகா வித்தியாலயத்தில் "குவைத் ஸகாத் ஹவுஸ்" நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட புதிய இரண்டு மாடிக் கட்டடத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் (23) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் நடைபெற்றது.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் வேண்டுகோளுக்கு இணங்க "குவைத் ஸகாத் ஹவுஸ்" நிதியுதவியுடன் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அதற்காக செலவிடப்பட்ட தொகை 200 லட்சம் ரூபா. இந்தப் பாடசாலையில் சுமார் 350 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இரண்டு தளங்களைக் கொண்ட, கீழ் தளத்தில் 3 வகுப்பறைகளும், மேல் தளத்தில் பிரதான மண்டபமும் உள்ளன.

இதன்போது, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், இலங்கைக்கான குவைத் பிரதித் தூதுவர் பத்ர் அல்னோ வைம், குவைத் ஸகாத் ஹவுஸின் பணிப்பாளர் நாயகம் மஜீத் எஸ்.எம்.எஸ். அலசெமி மற்றும் அதிகாரிகள் குழுவினர் கலந்து கொண்டனர்.



# நீர்வேலிப் பகுதியில் விபத்து; பெண்ணொருவர் உயிரிழப்பு!




யாழ்ப்பாணம் நீர்வேலிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று (24) இடம் பெற்றுள்ளது.

நீர்வேலி இராசவீதி பகுதியில் உள்ள ஆலய நிகழ்வு ஒன்றில் அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

இதன்போது எதிரே நிறுத்தி வைக் கப்பட்ட வாகனத்தின் மீது டிப்பர் வாக னம் ஒன்று மோதியுள்ளது.

இந்த நிலையில் அந்த வாகனம் அவரை மோதி தள்ளியதில் அந்தப் பெண் சம்பவ இடத் திலேயே உயிரிழந்துள் ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் நீர்வேலி மேற்கை சேர்ந்த 72 வயது வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தாயான தனபாலசிங்கம் மகேஸ்வரி என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வுகள் பாலமுனையில்!

**(எம். எப். நவாஸ் )**

பாலமுனையில் வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் பால முனை மின்ஹாஜ் மகா வித்தி யாலய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

91's Better Guidance அமைப்பின் தலைவரும் , நாவுல பண்ணை நிறுவ னத்தின் முகாமையாளருமான வை.எல். எம்.றிப்கான் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது வாழ்வாதார உதவியாக தேங்காய் திருவும் இயந்திரமும் வழங்கப்பட்டது.

பாலமுனை பிரிவுகளிலுள்ள வலது குறைந்த நபர்கள், விதவைகள், வறிய குடும்பங்களுக்கு அரிசி , உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

வாழ்வாதார உதவியாக ஒரு லட்சம் ரூபா பணமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்ட அக்கரைப்பற்று ஏசியா செப் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.அனஸ்தீன், ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் எம். சி.அப்துஸ் சமது, சஜிர் என்.பி.சம்சுடீன் ஆகியோர் பொன்னாடை போர்த்து நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர்.



# சட்டப்பேரவைத் தேர்தலிலும் பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை!

## அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி மீண்டும் திட்டவட்டம்



நாடாளுமன்றத் தேர்தல் மட்டுமின்றி எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டப்பேரவைத் தேர்தலிலும் பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறிய 520 வாக்குறுதிகளையும் 100 சதவீதம் நிறைவேற்றியுள்ளோம் என கூறுவது உண்மையல்ல. முதியோர் உதவித் தொகை உயர்வு, கல்விக் கடன் ரத்து, 100 நாள் வேலைத் திட்டம் 150 நாளாக உயர்வு, பெட்ரோல் – டீசல் விலை குறைப்பு என பல்வேறு வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. மின் கட்டணம் 12 சதவீதம் முதல் 50 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

தேர்தல் நேரத்தில் அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் ஆயிரம் ரூபா உதவித் தொகை என அறிவித்து விட்டு, இப்போது தகுதியானவர்களுக்கு எனக் கூறுவது ஏமாற்று வேலை. இதேபோல, நீட் தேர்வு ரத்துக்கு முதல் கையெழுத்து என சொல்லிவிட்டு ஸ்டாலின் ஏமாற்றி வருகிறார். நீட் தேர்வு ரத்து ரகசியம் தெரியும் என கூறிய அமைச்சர் உதயநிதி, இப்போது கையெழுத்து இயக்கம் நடத்துவது வேடிக்கை. மக்களவைத் தேர்தலில் மக்கள் தி.மு.கவுக்கு முட்டை வழங்குவார்கள்.

எங்களைப் பொறுத்தவரை பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகி விட்டோம். அதனால் முதல்வர் ஸ்டாலின் பயப்படுகிறார். சிறுபான்மை மக்களுக்கு நன்மை செய்வதுபோல தி.மு.கவும் அதன் கூட்டணி கட்சிகளும் ஒரு தோற்றத்தை உருவாக்கியிருந்தன. பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. விலகிய பின்னர் சிறுபான்மை மக்கள் எங்களைச் சந்திப்பதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் வெறுப்பு பேச்சு பேசி வருகிறார்.

மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. தலைமையில் வலுவான கூட்டணி அமையும். 2024 ஆம் ஆண்டில் மட்டுமல்ல 2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலிலும் பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை.

காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட நெருக்கடி நிலையில் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முதல்வர் ஸ்டாலின், பின்னர் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைக்கிறார். ஆட்சி அதிகாரத்துக்காக யாரிடம் வேண்டுமானாலும் கூட்டணி வைப்பார்கள்.

கொள்கைக்கும் தி.மு.க. கூட்டணிக்கும் சம்பந்தம் இல்லை. மத்தியில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தி.மு.க. சார்பில் அமைச்சர்களை கொண்டுவரப் பார்க்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார்,

# கவுதமிக்கு பா.ஜ.க. உதவும்: அண்ணாமலை உறுதி

நடிகை கவுதமிக்கு பா.ஜ.க. நிச்சயம் உதவும் என தமிழக பா.ஜ.க. தலைவர் கே.அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

நடிகை கவுதமி கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக பா.ஜ.கவில் பணியாற்றியவர். அவர் கட்சியில் இருந்து விலகுகிறேன் என்று நேற்று முன்தினம் அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

என்னுடைய 17 வயதிலிருந்து நான் வேலை செய்து கொண்டிருக்கிறேன். நானும் என் மகளும் பாதுகாப்பான சூழலில் இருக்க வேண்டிய ஒரு கட்டத்தில் இருக்கிறோம். ஆனால் பா.ஜ.க. நிர்வாகியான சி.அழகப்பன் என்னுடைய பணம், சொத்து, ஆவணங்களை ஏமாற்றிவிட்டார்.

மேலும் அழகப்பன் சட்டத்திலிருந்து தப்பிக்கவும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 40 நாட்களாக அவர் தலைமறைவாக இருப்பதற்கும் சில மூத்த பா.ஜ.க. உறுப்பினர்கள் உதவி செய்திருப்பதை அறிந்து நொருங்கிப் போனேன்.



25 ஆண்டுகாலம் கட்சிக்குத் தொடர்ந்து விசுவாசமாக இருந்தபோதும், எனக்கு முற்றிலுமாக ஆதரவு இல்லை.

எனவே, கனத்த இதயத்துடனும், கடும் அதிருப்தியுடனும் பா.ஜ.கவில் இருந்து விலக முடிவு செய்திருக்கிறேன் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதுதொடர்பாக தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

கவுதமி குற்றம்சாட்டிய நபர் பா.ஜ.கவின் எந்த பொறுப்பிலும் இல்லை. அவருடன் நானும் மூத்த நிர்வாகிகளும் பேசியது கிடையாது.

இந்த விவகாரத்தில் கட்சி அளவிலும் தனிப்பட்ட முறையிலும் கவுதமியுடன் நிற்கிறேன். இதில் பொலிஸ் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். கவுதமியிடம் நான் பேசியிருந்தேன். கட்சியில் யாராவது குற்றவாளியை காப்பாற்ற முயற்சித்தாலும் அவர் குறித்த விவரத்தையும் என்னிடம் தெரிவிக்குமாறு கூறியுள்ளேன்.

கவுதமி கட்சியில் தொடர்ந்தாலும் இல்லாவிட்டாலும் அவருக்கு பா.ஜ.க. நிச்சயம் உதவும் என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் - ஹமாஸ் போர்:

# அப்பாவி மக்களின் பாதுகாப்பு முக்கியம் என ஐ.நா. வலியுறுத்தல்




மத்திய கிழக்கில் நிலைமை நேரத்துக்கு நேரம் மோசமாகி வருகிறது எனவும் போரில் பொதுமக்களின் பாதுகாப்பு முக்கியமானதாக இருக்க வேண்டும் என்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து மோதல் தீவிரமடைந்து வருகிறது.

அதனால் அதிகரித்து வரும் மனிதாபிமான நெருக்கடி ஆகியவைகள் குறித்து விவாதிக்க ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டம் நியூயோர்க்கில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் செவ்வாய்க் கிழமைக்கிழமை கூடியது.

இதன்போது ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் உரையாற்றுகையில், மத்திய கிழக்கில் நிலைமை ஒவ்வொரு மணிநேரத்துக்கும் மோசமடைந்து வருகிறது. பிரிவுகள் சமூகங்களைப் பிளவுபடுத்தி பதற்றத்தை தொடந்து கொதிப்படையச் செய்கின்றன. இதனால் போரின் போது பொதுமக்களின் பாதுகாப்புத் தொடங்கி கொள்கைகளில் உறுதியாக இருப்பது இன்றியமையாதது.

இந்த மனிதத் தன்மையற்ற துன்பத்தை குறைப்பதற்கு, மனிதாபிமான உதவிகள் கெண்டு செல்வதை எளிதாக்க வேண்டும். பணய கைதிகள் விடுதலை செய்யும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஐ.நா. தீர்மானங்கள், சர்வதேச சட்டங்கள், முந்தைய ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இஸ்ரேலியர்களின் பாதுகாப்புக்கான நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

பாலஸ்தீனத்தின் சுதந்திரமான அரசுக்கான தேவை உணரப்பட வேண்டும். மேலும், குடிமக்களைக் கொலை செய்தல் மற்றும் கடத்துதல், குடியிருப்பு பகுதிகளில் நடத்தப்பட்ட ஹமாஸ்களின் ரொக்கெட் குண்டு தாக்குதலை நியாயப்படுத்த முடியாது.

அதேபோல் ஹமாஸ்களின் தாக்குதல் வெற்றிடத்தில் நடத்தப்பட வில்லை என்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

பாலஸ்தீனியர்கள் கடந்த 56 வருடங்களாக ஆக்கிரமிப்புகளின் அழுத்தத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். ஆனால் பாலஸ்தீனர்களின் இந்த மனக்குமுறல் ஹமாஸ்களின் தாக்குதலை நியாயப்படுத்த முடியாது.

அதேபோல், இந்தத் தாக்குதல் காரணங்களுக்காக பாலஸ்தீன மக்கள் தண்டிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று தெரிவித்துள்ளார்.

# ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக அடுத்த கட்ட போருக்கு தயாராகிறோம்!

## - இஸ்ரேல் இராணுவம் அறிவிப்பு

பாலஸ்தீனத்தின் காசா பகுதி ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக அடுத்த கட்ட போருக்கு தயாராகிறோம் என்று இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் இராணுவம், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு இடையே நேற்று 18 ஆவது நாளாக போர் நீடித்தது.

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் சுமார் 400 இடங்களை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று தாக்குதல் நடத்தின.

இதில் ஒரே நாளில் 700 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என பாலஸ்தீன சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. காசா பகுதியில் ஒட்டுமொத்த உயிரிழப்பு 5,000-ஐ தாண்டியுள்ளது.

இதனிடையே ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இஸ்ரேலின் வடக்கு பகுதி எல்லையை குறிவைத்து தொடர்ந்து ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அந்த எல்லைப் பகுதிகளிலும் சண்டை தீவிரமடைந்துள்ளது.



இந்த சூழலில் இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

பாலஸ்தீனத்தின் காசா பகுதிகளில் ஹமாஸ் தீவிரவாதிகளின் இருப்பிடங்களை குறிவைத்து வான்வழி தாக்குதல்களை நடத்தி வருகிறோம். எங்களை பொறுத்தவரை ஹமாஸ் தீவிரவாதிகளை கூண்டோடு அழிக்க வேண்டும்.

காசா பகுதி ஆட்சி நிர்வாகத்தில் இருந்து அவர்களை முழுமையாக நீக்க வேண்டும். அடுத்த கட்ட போருக்கு தயாராகி வருகிறோம். இதன்படி காசாவில் தரைவழி தாக்குதல் நடத்த தயார் நிலையில் இருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.